**இரண்டாம் பருவத் தேர்வு – 2024 – 2025**

**காலம் : 2.00 மணி** **வகுப்பு 6** **தமிழ்** **மதிப்பெண்கள் : 60**

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 5 x 1 = 5

1. பள்ளிக்கூடம் செல்லாததற்கு ஆடு மேய்க்கும் சிறுவர்கள் கூறிய காரணம் ..............................

அ) இடுமேய்க்க ஆள் இல்லை ஆ)வழி தெரியவில்லை

இ) ஊரில் பள்ளிக் கூடம் இல்லை ஈ) பேருந்து வசதி இல்லை

2. பிறரிடம் நான் ........................ பேசுவேன்

அ) கடுஞ்சொல் ஆ) இன்சொல் இ) வன்சொல் ஈ) கொடுஞ்சொல்

3. நூலகத்தின் தந்தை என்று அழைக்கப்படுவர்........................

அ) லோகநாதன் ஆ) உலகநாதன் இ) இரா. அரங்கநாதன் ஈ) ஜெ. ரெங்கநாதன்

4. சுட்டு எழுத்துகள் ................ வகைப்படும்

அ) ஐந்து ஆ) மூன்று இ) ஏழு ஈ) ஒன்பது

5. போர்க்களத்தில் வெளிப்படும் குணம். ..............................

அ) மகிழ்ச்சி ஆ) துன்பம் இ) வீரம் ஈ) அழுகை

**II கோடிட்ட இடங்களை நிரப்புக.** 4 x 1 = 4

6. முடியரசனின் இயற்பெயர் ........................

7. காமராசரைக் கல்விக் கண் திறந்தவர் என மனதாரப் பாராட்டியவர் ..............................

8. பொருள்களை விற்பவரை எவ்வாறு அழைக்கலாம். ......................................

9. உயிர்மெய் எழுத்துகள் ...................... ஆகும்

**III பொருத்துக** 4 x 1 = 4

10. விடிவெள்ளி - பஞ்சுமெத்தை

11. மணல் - ஊஞ்சல்

12. புயல் - போர்வை

13. பனிமூட்டம் - விளக்கு

**IV எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி** 5 x 2 = 10

14. மயங்கொலி எழுத்துகளை எழுதுக.

15. நாம் எவ்வாறு வாழ வேண்டும் என பட்டுக்கோட்டையார் கூறுகிறார் ?

16. எப்படி உண்பது விரும்பத்தக்கது அன்று ?

17. மீனவர்கள் தமது வீடாகவும் செல்வமாகவும் கருதுவனயாவை ?

18. வணிகம் என்றால் என்ன ?

19. போகிப் பண்டிகை எதற்காக கொண்டாடப் படுகிறது ?

20. கண்மணியே கண்ணுறங்கு பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

**V அடி பிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

21. பாயும் புயல் எனத்தொடங்கும் பாடலை எழுதுக

22. வெள்ளத்து எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக

**VI எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.** 6 x 2 = 12

23. அ) நீர் -............... தேங்கி இருக்கிறது? (அது / எங்கே )

ஆ) யார் ......................- தெரியுமா? (அவர் / யாது)

www.Padasalai.Net

24 பொருள் தருக

அ) மாற்றார் ஆ) நந்தவனம்

25. கலைச் சொல் தருக.

அ) Consumer ஆ) Merchant

26. சேர்த்து எழுதுக.

அ) உள்ளுவது + எல்லாம் ஆ) வாழை + இலை

27. பிரித்து எழுதுக

அ) படிப்பறிவு ஆ) நானிலம்

28. தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

அ) முத்தேன் ஆ) முத்தமிழ்

29. இடம் மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் ஊக்கம்

அசைவுஇலா உடையான் உழை

30. மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

அ) மன்டபம் ஆ) கன்டம்

**VIII எவையேனும் மூன்று வினாவிற்கு விடையளி.** 3 x 3 = 9

31. ஆசாரக் கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?

32. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?

33. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை ?

34. மாமல்லபுரத்தில் காண வேண்டிய இடங்கள் யாவை ?

35. பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் எவை?

**IX எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5 x 2 = 10

36. கடிதம் எழுதுக.

பிறந்தநாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.

37. காமராசரின் கல்விப் பணிகள் குறித்து எழுதுக.

38. மனம் கவர்ந்த மாமல்லபுரம் பாடக் கதையை சுருக்கி எழுதுக.

www.Padasalai.Net